செ.வெ.எண் : 37 / ஜூன் நாள் : 19.06.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்படும் இ-சேவை மையத்தின் மூலம் 6,56,393 வருவாய் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (19.06.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள், பொது இ-சேவை மையத்தின் கணினி இயக்குபவர்களுக்கான பயிற்சியினைத் துவக்கி வைத்தார்.

பயிற்சியினைத் துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் கீழ் 224 கிராம பஞ்சாயத்துகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் கீழ் 47 மையங்களும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கீழ் 8 வட்டாட்சியர் அலுவலகங்களிலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பரமக்குடி, இராமேஸ்வரம் ஆகிய நகராட்சிகள் மற்றும் கிராமப்புற தொழில்முனைவோர் (VLE) கீழ் 31 என மொத்தம் 313 இ-சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த இ-சேவை மையங்கள் மூலமாக தமிழக அரசின் வருவாய்த்துறை மற்றும் சமூக நலத்துறை பட்டா மாறுதல் , குடும்ப அட்டைதாரார்கள் புதிய குடும்ப அட்டை விண்ணப்பித்தல், பெயர் சேர்த்தல் , நீக்கல் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் இணைய வழி சேவை மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இ-சேவை மையத்தின் வாயிலாக இதுவரை வருவாய்துறை சான்றிதழ்கள் 6,56,393, சமூக நலத்துறை சார்ந்த 13,456 சேவைகள் மற்றும் 25700 பட்டா மாறுதல்களும் வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் சிரமமின்றி தாங்கள் வசிக்கும் இடங்களில் உள்ள இ-சேவை மையத்தினை அணுகி சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளலாம். இன்றைய தினம் இ-சேவை மையத்தின் செயல்பாடுகள் குறித்து அனைத்து இ-சேவை மைய கணினி இயக்குபவர்களுக்கு பயிற்சி நடைபெறுகிறது. இப்பயிற்சியினை முழுமையாக பயன்படுத்தி கொண்டு, பொதுமக்களுக்கு காலதாமதமின்றி சேவை ஆற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இப்பயிற்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, மின் மாவட்ட மேலாளர் திரு.கே.பிரியதர்ஷன், கூடுதல் மின் மாவட்ட மேலாளர் திருமதி.சி.மேகலா உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**